# மெட்ரோ ரயில் நிலையங்களை இணைக்கும் சீருந்து சேவைக்கு பயணிகள் வரவேற்பு

## ● ஒரே வாரத்தில் 4 நிலையங்களில் தொடக்கம்

■ சென்னை

சென்னையில் தற்போது 2 தடங்களில் 45 கிமீ தொலைவுக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. பயணிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க எழும்பூர், வடபழனி, கிண்டி உள்ளிட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து குடியிருப்பு பகுதிகளை இணைக்கும் வகையில் ஷேர் ஆட்டோ, டாக்ஸிகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையே, சென்னை சென்ட்ரல், அரசினர் தோட்டம், எல்ஐசி, ஆயிரம்விளக்கு, டிஎம்எஸ் ஆகிய மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து சீருந்து இணைப்பு வசதி கடந்த மாதம் 5-ம் தேதி தொடங்கப்பட்டது.

இதில், மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து 6 முதல் 8 கி.மீ தொலைவுக்கு நபர் ஒருவருக்கு ரூ.10 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்த சேவை பயணிகளிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளதால், படிப்படியாக மற்ற மெட்ரோ ரயில் நிலையங்களிலும் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. ஒரே வாரத்தில் 4 மெட்ரோ நிலையங்களில் இது தொடங்கப்பட்டுள்ளது.

அதன்படி, கடந்த 25-ம் தேதி நங்கநல்லூர் ரோடு, ஷெனாய் நகர் மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து சீருந்து வாகன இணைப்பு சேவை தொடங்கப்பட்டது. இந்நிலையில், அரும்பாக்கம், நேரு பூங்கா மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து சீருந்து சேவை நேற்று தொடங்கப்பட்டது. இதேபோல், சைதாப்பேட்டை, கீழ்ப்பாக்கம், அண்ணாநகர் டவர் மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து சீருந்து சேவை விரைவில் தொடங்கப்படவுள்ளது.